

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனையின்படி காரிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் வக்கில். எம்.வீ.டி. கோபால் தலைமையில் தர்மபுரி மேற்கு மாவட்டம், ஜிட்டாண்டஅள்ளியில் வீடுவீடாகச் சென்று திராவிடமாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி மக்களுடன் ஸ்டாலின் செயலி மூலம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் கழக உறுப்பினராக பொதுமக்களை சேர்க்கும் பணி நடைபெற்றது. உடன் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டி.எம்.அரியப்பன், சூடப்பட்டி சுப்ரமணி, ஹரிபிரசாத், ஏ.வி.குமார், முனிரத்தினம், முனுசாமி, ஜே.எம்.சக்தி, ஐ.டி.விங் பரணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### நாமக்கல் மாவட்டத்திற்கு இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# ரூ.33.18 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!



நாமக்கல், ஜூலை 10 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் இன்று நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்..

அதனைத் தொடர்ந்து, துணை முதலமைச்சர் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 139 பணிகளுக்கு ரூ.87.38 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டியும், ரூ.10.80 கோடி மதிப்பில் முடிவுற்ற 36 திட்டப்பணிகளை திறந்து வைத்தும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மாவட்ட தொழில் மையம், தொழிலாளர் நலத்துறை, பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 2001 பயனாளிகளுக்கு ரூ.33.18 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, விழா பேருரையாற்றுகிறார். மேலும், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

மேலும், நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம் ஆகிய நகராட்சிகள் மற்றும் நகராட்சி சுற்று வட்டாரப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு முதற்கட்டமாக பட்டாக்கள் மற்றும் இலவச வீட்டுமனைப் பட்டா ங்களை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கில் நவீன விளையாட்டு உடற்பயிற்சி கூடத்தினை திறந்து வைத்து, நாமக்கல் மாவட்டத்தின் சார்பில் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றி வீரர், வீராங்கணைகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இவ்விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் , அரசு கூடுதல் செயலாளர், மாநிலங்களவை, பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர் என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார்.

இன்று 10.07.2025. தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

1. காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ள ஆய்வு கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

2. காலை 11.00 மணிக்கு நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள ஸ்ரீ மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட சார்பு அணிகள் ஆலோசனை கூட்டம்.

3. மாலை 03.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கில் விளையாட்டு வீர்ரகளுடன் கலந்துரையாடல்.

4. மாலை 05.20 மணிக்கு சேலம் விமான நிலையத்தில் இண்டிகோ விமானம் மூலம் சென்னை புறப்படுதல்.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதி வேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### இதுவரை ரூ.6 கோடியே 27 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

அந்த வகையில்

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 27 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 08–07–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கா.இப்ராஹீம்ஷா, 9வது வார்டு, பாலசமுத்திரம், பழனி, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 2. | கே.ராமமூர்த்தி, பொன்குளம், பனைக்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 3. | எம்.ராமர், கிளைச் செயலாளர், வேப்பங்குளம், திருவேங்கடம், தென்காசி | 25,000/– |
| 4. | எஸ். சண்முகையா, களப்பாகுளம், சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம் | 25,000/– |
| 5. | அ.ஜெயபாண்டி, செல்வநாயகபுரம், போல்பேட்டை பகுதி, தூத்துக்குடி | 25,000/– |
| 6. | செ.மாரியப்பன், குதிரை லாயத் தெரு, கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் | 25,000/– |
| 7. | ஜே.பேபிசிங்,தெற்றிவிளை, அருமனை& அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் | 25,000/– |
| 8. | பெ.சேனாதிபதி, 5வது குறுக்கு தெரு, சக்தி நகர், புதுச்சேரி – 605013. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |




# தி.மு.க.
# இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**10.07.2025 வியாழக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | அரசு ஆய்வுக்கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல். |
| காலை 11.30 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல். |
| மதியம் 12.00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான கலந்துரையாடல். | ஸ்ரீ மஹால், நாமக்கல். |
| மதியம் 03.00 மணி | விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடல். | மாவட்ட விளையாட்டு வளாகம், நாமக்கல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18

நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023




# செஞ்சியில் விதை தொகுப்புகள் வழங்கல்!

செஞ்சி, ஜூலை 10 -

செஞ்சி ஒன்றியம் ஜம்போதி ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில்காய்கறி விதை தொகுப்புகள், பழச் செடிகளை வழங்கினார்

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஜம்போதி ஊராட்சியில் செஞ்சி வட்டார தோட்டக்கலை துறை சார்பில் விவசாய பயனாளிகளுக்கு காய்கறி விதை தொகுப்புகள் மற்றும் பழச் செடிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி முன்னிலை வகித்தார்.

செஞ்சி வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சுதந்தி அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் செய்துள்ள பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. அம்பிகா

ஜூலை 10 (2017)



கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.

2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.